Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC .No. 424/2019**

**Deposition of PW. 1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோவிந்தராஜ் | ஜாதி | : | |
| த/பெ | : | தங்கராஜ் | தொழில் | : | ஓட்டுநர் |
| கிராமம் | : | தருமத்துப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 49/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2026.

( எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை**

நான் தருமத்துப்பட்டியில் குடியிருந்துகொண்டு ஓட்டுநராக வேலை பார்க்கிறேன். வாகன விபத்தில் இறந்துபோன இளம்பரிதி எனது மாமா ஆவார். கடந்த 4 1/2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் எனது காரில் பன்றிமலைக்கு விசேசத்திற்கு சென்றேன். அதேபோல் இளம்பரிதி அவரது இருசக்கர வாகனத்தில் அவர் மட்டும் ஓட்டிக்கொண்டு பன்றிமலைக்கு வந்துகொண்டிருந்தபோது, பன்றிமலைக்கு கீழே அமைந்துள்ள அழகுமடை கிராமத்தில் வந்தபோது மேற்படி இளம்பரிதி பன்றிமலையில் இருந்து தருமத்துப்பட்டிக்கு அழகுமடை கிராமத்தில் வந்தபோது தருமத்துப்பட்டியில் இருந்து பன்றிமலைக்கு சென்ற பிக்கப் நான்குசக்கர வாகனம் திடீரென வேகத்தில் வந்து திரும்பியதில் இளம்பரிதி மீது மோதி வாகன விபத்து ஏற்பட்டது. நான் சம்பவத்தை நேரடியாக பார்த்தேன். இளம்பரிதியை அடித்துவிட்டு அந்த பிக்கப் வாகனம் நிற்காமல் சென்றுவிட்டது. காயம்பட்ட இளம்பரிதியை சம்பவ இடத்தில் பார்த்தபோது நெற்றிபகுதி வெட்டப்பட்டு மண்டை இரண்டாக பிளந்துவிட்டது. காயம்பட்ட இளம்பரிதியை எனது காரில் ஏற்றிக்கொண்டு மருத்துவமனைக்கு வந்துகொண்டிருந்தபோதே இறந்துவிட்டார். நான் கன்னிவாடி காவல்நிலையம் சென்று நடந்த சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் படி புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் போடப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு **(அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் எந்த தேதியில், எங்கு வைத்து உங்களை விசாரித்தார்கள் என்றால் தேதி, மாதம் ஞாபகமில்லை. முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் போலிஸ் விசாரணையிலும், புகார் மனுவிலும் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான்.

நீங்கள் சென்ற வாகனத்தின் பதிவெண் போலிசாரிடம் சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. விபத்து நடந்த சாலை வளைவுகள் அதிகம் உள்ள மலைப்பகுதி சாலை என்றால் சரிதான். அந்த சாலையில் எந்த வாகனமும் அதிக வேகமாக ஏற முடியாது என்றால் சிறிய வாகனம் ஏறலாம், பெரிய வாகனம் ஏற முடியாது. மலையில் இருந்து இறங்கும் வாகனம் வேகமாக இறங்கும் என்றால் சரிதான்.

புகாரை யார், எங்கு வைத்து எழுதினார்கள் என்றால் எனக்கு தெரியாது. புகாரில் எந்த தேதியில் புகார் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நீங்களும், உங்கள் நண்பரும் எவ்வளவு இடைவெளியில் சென்றுகொண்டிருந்தீர்கள் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் எதிரியின் பெயர், விபரங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எதிரியை நீங்கள் பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி ஆஜராகியிருந்தாலும் அவரை அடையாளம் காட்ட இயலாது என்றால் சரிதான். வளைவில் வாகனம் வரும்போது எதிரே வரும் வாகனத்தை பார்க்க முடியாது என்றால் சரிதான். எவ்வளவு நேரம் கழித்து விபத்து நடந்த இடத்திற்கு சென்றீர்கள் என்றால் 10 நிமிடம் கழித்து சென்றேன். சம்பவம் நடந்த இடத்தில் வாகனத்தை நீங்கள் பார்க்கவில்லை என்றும், போலிசார் சொல்லி தான் உங்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் வாகனத்தை பார்க்கவில்லை என்பது மட்டும் உண்மை. நேரத்தை கணக்கிட்டு செக்போஸ்ட்டில் அந்த ஒரு வண்டி மட்டும் தான் சென்றது. அதை வைத்து தான் நான் கூறுகிறேன். அந்த விபரம் போலிசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான்.

நீங்கள் சென்று பார்க்கும்போது ரோட்டின் எந்த பகுதியில் காயம்பட்ட நபர் இருந்தார் என்றால் ரோட்டின் இடது ஓரமாக வளைவு பகுதியில் இருந்தார். சம்பவத்தன்றே புகார் கொடுத்தீர்கள் என்றால் சரிதான். புகாரை நீங்கள் படித்துப் பார்த்து கையொப்பம் செய்தீர்களா என்றால் படித்துப் பார்த்து தான் கையொப்பம் செய்தேன். புகார் மனுவில் நீங்களும், உங்கள் நண்பரும் ஒரே வாகனத்தில் சென்றதாக தான் கூறப்பட்டுள்ளது என்றும், புகார் மனுவில் உள்ள சங்கதிகளை தெரியாமல் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. இறந்தவர் உங்கள் நண்பர் என்பதால் அவருக்கு இழப்பீடு பெற்றுத்தர வேண்டும் என்பதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor